சார்பு நீதிமன்றம் உத்தமபாளையம்

நாள்: 05.08.2025 SC. 50/2017

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வினோஜி | தொழில் | : | |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | | வயது | : | |
| விலாசம் | : | | | | |
| | | PW9 | | | |

---

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து தற்சமயம் ஓய்வு பெற்றுள்ளேன். இதற்கு முன்பு சின்னமனூர் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது 15.10.2013 ம் தேதி 16.00 மணிக்கு அப்போதைய சார்பு ஆய்வாளர் சேதுராமன் என்பவர் பதிவு செய்ய வழக்கு குற்ற எண் 296/2013 பிரிவு 294(b), 324,341,307 இ.த.ச. வழக்கை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். 17.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் நாசர், முத்துப்பாண்டி இவர்கள் முன்னிலையில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன், நான் தயார் செய்த பார்வை மகஜர் அ.சா.ஆ.9. மாதிரி வரைபடம் அ.சா.ஆ.10, சாட்சிகள் கருப்பாயியம்மாள், செல்வம், பொன்மணி, நாசர், முத்துப்பாண்டி இவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதே தேதியில் இவ்வழக்கில் 2 வது எதிரி காஜா மைதீன், என்பவரை 18.10 மணிக்கு குச்சனூர் குருபகவான் கோவில் முன் வைத்து கைது செய்து சாட்சிகள் கடல் கண்ணன், செல்வம், இவர்கள் முன்னிலையில் எவ்வித அச்சுறுத்தலும், ஆசை வார்த்தையின்றி அவர்கள் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள், அவர் கொடுத்த தகவலின் அடிப்படையில் தன்னை அழைத்து சென்றால், சம்பவத்திற்கு பயன்படுதத்திய உருட்டுக்கட்டையை ஆஜர் செய்கிறேன் என கூறினார், அதன்படி 19.00 மணிக்கு குச்சனூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி காம்பவுண்ட் முள் புதரில் எதிரி எடுத்து ஆஜர் செய்த சுமார் 3 அடி நீளமும், 1 1/2 இஞ்ச் விட்டமும் உள்ள உருட்டுக்கட்டையை சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி மூலம் கைப்பற்றினேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.11, அத்தாட்சி அ.சா.ஆ.12, பிறகு எதிரி மற்றும் வழக்கு சொத்துகளுடன் நிலையம் வந்து தக்க வழிநடை மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். அதன் பின்னர் சாட்சிகள் கடல்கண்ணன், சான்னாசி தேவர் மகன் செல்வம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 24.10.2023 ம் தேதி இவ்வழக்கின் 1வது எதிரி சரவணன்

என்பவரை காலை 8.00 மணிக்கு சின்னமனூர் வாரச்சந்தை முன் நுழைவு வாயிலில் வைத்து கைது செய்து சாட்சிகள் கடல்கண்ணன், செல்வம் முன்னிலையில் ஒரு ஒப்புதல் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.13, அதே தேதியில் வழக்கில் காயமுற்ற சாட்சி பரமசிவம், மற்றும் சாட்சிகள் கடல்கண்ணன், செல்வம் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 10.12.2023 ம் தேதி வழக்கில் காயமுற்ற பரமசிவம் ்என்பவருக்கு சிகிச்சை அளித்த தேனி அரசு மருத்துவர் Dr.ஜெரால்டு, சின்னமனூர் அரசு மருத்துவர் டாக்டர் நீதிமன்னன், சார்பு ஆய்வாளர் சேதுராமன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது விசாரணை முடிவுற்றபடியால் எதிரிகள் மீது இ.த.ச.294(b),341,324,307 ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

ஓம் M.சிவாஜி செல்லையா,
சார்பு நீதிபதி,
உத்தமபாளையம்.